தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
&
இந்தியவானிலைத் துறை
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை
திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(03.06.2026 முதல் 07.06.2026)

**அறிக்கை எண் 18/2026** **தேதி. 02.06.2026**

**திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

திருவாரூர் மாவட்டத்தின் 29.05.2026 முதல் 01.06.2026 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 38 - 39 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 26 - 28 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 81 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 0 - 6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் தென் மேற்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருவாரூர் (03.06.2026 முதல் 07.06.2026)**

| கடந்த வார வானிலை (29.05.2026 முதல் 01.06.2026) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 07.06.2026 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/05 | நாள்-2 30/05 | நாள்-3 31/05 | நாள்-4 01/06 | தேதி | நாள்-1 03/06 | நாள்-2 04/06 | நாள்-3 05/06 | நாள்-4 06/06 | நாள்-5 07/06 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 3 | 3 | 26 | 29 |
| 38 | 38 | 38 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 39 | 38 | 38 | 37 | 36 |
| 28 | 27 | 28 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 30 | 30 | 29 | 28 |
| 6 | 6 | 5 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 7 | 8 | 8 |
| 78 | 74 | 72 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 70 | 80 | 90 |
| 72 | 0 | 69 | 80 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 70 | 60 | 70 | 80 |
| 4 | 0 | 4 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 8 | 10 | 8 | 10 |
| தென் தென் மேற்கு | வடக்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | காற்றுவீசும் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 04.06.2026 முதல் 07.06.2026 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 - 39 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 31 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6 - 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | |
|---|---|
| பொது | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |

| | | |
|---|---|---|
| நெல் | நாற்றாங்கால் | குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும் |
| நெல் | நடவு வயல் | நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தழை/ மணி, சாம்பல் சத்துடன் 10 கிலோ ஜிங்சல்பேட்டும், 200 கிலோ ஜிப்சமும் இடவேண்டும். |
| தென்னை | | உகந்த வானிலை இருப்பதால் தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்கவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | வெய்யிலின் தாக்கத்தை குறைக்க மாட்டுத் தொழுவத்திற்கு அலுமினியத்தாலான மேற்கூரை இடவும் |

## குறுஞ்செய்தி

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**